உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி-5

கோ.எண்:25-56/உ.ந./வருவாய்/2024 ஜவகர் நகர், தேதி 13-12-24

## மின்னனு ஏல அறிவிப்பு

புதுச்சேரி, உழவர்கரை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட பகுதியில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் கனரக ஊர்தி மையத்தில் நிறுத்தப்படும் கனரக வாகணங்களுக்கு கட்டணம் வசூல் செய்ய ஓராண்டிற்கான உரிமம் பெற கீழ்காணும் விபரங்கள் மற்றும் நிபந்தனைகளின் படி மின்னனு ஏலம் வாயிலாக நடத்தப்பட உள்ளது.

ஏலத் தேதி மற்றும் நேரம்: **30.12.2024 , திங்கள் கிழமை, காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.**

| மேட்டுபாளையம் கனரக ஊர்தி போக்குவரத்து மையத்தில் கனரக வாகணங்களுக்கு கட்டணம் வசூல் செய்வதற்கான மின்னனு ஏல் அறிவிப்பு | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **ஏல விபரம்** | **நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஓராண்டிற்கான ஏலத்தொகை** ரூ. | **பிணை வைப்பு தொகை** ரூ. |
| **1.** | மேட்டுபாளையம் கனரக போக்குவரத்து ஊர்தி மையம் | 5,00,000/- | 50,000/- |

## ஏல நிபந்தனைகள்

1. ஏலம் எடுப்பவர் தனிநபராக இருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கூட்டு சேர்ந்து ஏலம் எடுக்கக்கூடாது.

2. ஏலம் எடுக்க விரும்பும் ஏலதாரர், மின்னனு ஏலத்தில் பங்கேற்க சரியான டிஜிட்டல் விசையை (Digital Key) வைத்திருக்க வேண்டும். மேலும், ஏலப்படிவம் புதுச்சேரி, ஜவகர் நகரில் உள்ள உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் காசாளரிடம் ரூபாய் 500/- மற்றும் 5% சரக்கு மற்றும் சேவைவரி (GST) செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது உழவர்கரை வலைதளமான www.oulmun.in –ல் இருந்து பதிவிறக்கம்செய்து htpps:/eauction.gov.in என்ற வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யவேண்டும் மேலும் அதனுடைய நகலை உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் சமர்பிக்கலாம். பதிவிறக்கம் செய்த ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் போது ரூபாய் 500/- மற்றும் 5% GST சேர்த்து"The Commissioner, Oulgaret Municipality, Puducherry" என்ற பெயரில் வரைவோலையை (Demand Draft) ஏலப்படிவத்துடன் கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஏலம் கேட்க விரும்புவோர் பூர்த்திசெய்து கையொப்பமிட்ட ஏலப்படிவம் மற்றும் அதற்குண்டான பிணை வைப்புத் தொகை ரூ.50,000/- க்கு ஆணையர்,உழவர்கரை நகராட்சி,புதுச்சேரி (The Commissioner, Oulgaret Municipality, Puducherry) என்ற பெயரில் ஏதேனும் ஒரு அரசு அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் வரைவோலை (Demand Draft) கண்டிப்பாக ஏலப்படிவத்துடன் இணைத்து சமர்பித்தல் வேண்டும்.

4. ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் **27.12.2024, வெள்ளிக்கிழமை, மாலை 4.00** மணி வரை ஆகும். பூர்த்தி செய்யப்பட்ட ஏலப்படிவங்கள் அரக்கு முத்திரை சீல் இடப்பட்ட உறையினில் "**ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி**" (The Commissioner, Oulgaret Municipality, Puducherry) என்று குறிப்பிட்டு ஜவஹர் நகர் கட்டிடத்தில் உள்ள ஆணையர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். உறையின் மேல் "**மேட்டுபாளையம் கனரக ஊர்தி மையத்தில் நிறுத்தப்படும் கனரக வாகணங்களுக்கு கட்டணம் வசூல் ஏல விண்ணப்பப் படிவம்**" என்று குறிப்பிட வேண்டும்.

5. ஏலத்தில் பங்கேற்போர் உழவர்கரை நகராட்சியின் வரி பாக்கியில்லா சான்றிதழ் பெற வேண்டும்.

6. உழவர்கரை நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஏலத்தொகையை விட அதிகமாக ஏலத்தொகை குறிப்பிட வேண்டும், அந்த தொகையிலிருந்து ஏலம் ஆரம்பிக்கப்படும். குறைந்தபட்சம் ஏலத்தொகை ரூ.1,000/- வித்தியாசத்தில் ஏற்றம் பெறவேண்டும்.

7. ஏலத்தில் அதிகபட்ச ஏலத்தொகை கேட்பவர் வெற்றி பெற்ற ஏலதாரர் ஆவார். ஏலம் எடுத்தவர் ஏலத் தொகையை இரண்டு தவணையாக செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதில் முதல் தவணை ஏலத்தொகையை அதேநாளில் காசோலையாகவோ அல்லது ரொக்கமாகவோ செலுத்துதல் வேண்டும். தவறினால் அவர் செலுத்திய பிணை வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் இரண்டாவது அதிகபட்ச ஏலதாரருக்கு ஏலத்தொகை அனுமதிக்கப்பட்டு உரிமம் வழங்கப்படும். இரண்டாவது தவணை அடுத்த மூன்று மாதங்களுக்குள் செலுத்தவேண்டும்.

8. ஏல தொகையை செலுத்திய தேதிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு அதற்குரிய உரிமம் வழங்கப்படும்.

9. ஏலத்தில் வெற்றி பெற்றவர் 4 சக்கரங்கள் வரை கொண்ட வாகனம் ஒன்றுக்கு ரூ.25/-, பேருந்து ஒன்றுக்கு ரூ.35/- மற்றும் 6 சக்கரங்களுக்கு மேற்பட்ட கனரக வாகணங்கள் ஒன்றுக்கு ரூ.45/- கட்டணமாக வசூல் செய்யவேண்டும்.

10. ஏலம் எடுத்தவர் கீழ்குத்தகைக்கு விடக்கூடாது மற்றும் ரசீது புத்தகத்தில் உழவர்கரை நகராட்சியால் முத்திரையிட்ட ரசீது மட்டுமே கொடுக்கவேண்டும்.

11. ஏலம் தொடர்பான இதர நிபந்தனைகளை உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வருவாய் அதிகாரியை நேரில் சந்தித்து தெரிந்துகொள்ளலாம்.

12. ஏலத்தை தள்ளி வைப்பதற்கும் (அ) நிறுத்தி வைப்பதற்கு மற்றும் ரத்து செய்வதற்கும் நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

**(ஆ. சுரேஷ்ராஜ்)**
**ஆணையர்**